இடத்தில் ஒரு ஆள் அடிபட்டு வருகிறார் என்றால், அது எமர்ஜென்சி கேஸாக இருந்தால் உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து சிகிச்சை செய்ய முடியாமல திங்கட்கிழமை காலைதான் எக்ஸ்-ரே எடுத்து பார்த்து சிகிச்சை செய்ய முடியும். இந்த நிலைமையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எமர்ஜென்சி கேஸ்கள் வருவதாக இருந்தால், ஓமலூர் போன்ற வட்டப் பகுதிகளிலே கூட எக்ஸ்-ரே யூனிட் இருந்தாலும், அதிலே பணியாற்றுபவர் உடனடியாக அழைக்கப்பட்டு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம். உடனடியாக சிகிச்சை செய்வது இயலாத காரியம் அல்ல. ஏதாவது குறை இருக்குமானால் அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாயூரம் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*612 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இரத்தம் சேமிப்பு நிலையம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாதிரி நீர், ரத்த சேமிப்பு நிலையத்தின் உபயோகத்திற்கு உகந்ததாக இருக்கிறது என அண்மையில் செய்த இரசாயன, நுண்ணியல் சோதனைகளின் மூலம் முடிவாகிவிட்டது. ஆதலால் மாயூரம் அரசு மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் வெகு விரைவில் துவங்கப்படும்.

Intensive Family Planning Programme

*613 Q.- THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to continue the scheme of Intensive Family Planning drive during the year 1973–74 also?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதிக அளவு ஊக்கத் தொகையுடன் பெருமளவில் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்துவது இவ்வாண்டு கைவிடப்

1974 மார்ச் 26]

பட்டுள்ளது. ஆனால், அறுவை மருத்துவத்திற்குரிய பெருவாரியான தம்பதியர் மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளத் தூண்டும் நோக்குடன் அவ்வாறு அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன்வரும் ஒவ்வொருவருக்கும் அதிக அளவு ரூ. 60 ஊக்கத் தொகை இம்மாநில அரசு அனுமதித்துள்ளபடி குடும்ப நல முனைப்புத் திட்ட இயக்கங்களை ஆட்சித் தலைவர்கள் நடத்தி வருகின்றனர்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இந்த முனைப்புத் திட்டத்தை இந்த ஆண்டு சேர்த்து நடத்த மத்திய அரசு நிதி உதவி செய்யும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் 50 சதவிகிதம் தருவதாக 6 மாதங்களுக்கு முன்னால் பத்திரிகையில் செய்தி வந்தது. மத்திய அரசு அடியோடு அதை நிறுத்தி விட்டார்கள் என்று இப்போது கேள்விப்படுகிறோம். இது குறித்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு 40 சதவிகிதம் தொகையை யாவது பெறுவதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சதவிகித செலவு என்பது குடும்ப நலத் திட்ட நிர்வாக முறையிலே ஆகிற செலவாகும். இந்த டியூபக்டமி, வாசக்டமி அறுவை சிகிச்சை களில்—ஆண்களுக்கும் பெண்களுக்கும் செய்யப்படுகின்ற அறுவை சிகிச்சைகளில்—மத்திய அரசு வழக்கம்போல் ஒத்துக் கொண்டிருக்கிற தொகை ஆண்களுக்கு 35 ரூபாயும், பெண்களுக்கு 45 ரூபாயும் மட்டுமே. கடந்த இரண்டு தீவிரத் திட்டங்களில் 100 ரூபாய் அளவில் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க முன்வந்தார்கள். இந்த ஆண்டு அதை அடியோடு நிறுத்தி விட்டார்கள். அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி காரண மாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனால் மாநில அரசு ஏறக்குறைய 50 லட்ச ரூபாயை தனியாக ஒதுக்கி, கடந்த டிசம்பர் மாதத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டு, ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு திங்கள் முடிய நடைபெற்ற அறுவை சிகிச்சைகளில் ஆண்களுக்கு 80 ரூபாயும், பெண்களுக்கு 85 ரூபாயும் செலவிட்டு, மேலும் ஊக்கத் தொகையாக 60 ரூபாய் வழங்கி, இத்திட்டத்தை நிறைவேற்றியது. அந்த முறையிலே ஓரளவு இந்தத் திட்டம் குறிப்பிட்ட இலக்கை அடைவதில் நிறைவேறி இருக்கிறது.